12th March 1966]

உணவு தானியங்கள்

* 265 கேள்வி—திரு. ஆ. துரையரசன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள தானியக் கிடங்கு களில் எவ்வளவு தானியம் சேமித்து வைக்க வசதி இருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : There are two godowns in Thanjavur District. One at Thanjavur and the other at Mannargudi. The capacity of the godowns is 50,000 tonnes each.

திரு. கோ. சி. மணி : இந்த கோடவுன் கட்டி முடிந்ததற்குப் பிறகு 1965 முடிய வைத்திருந்த நெல்லின் ஸ்டாக் எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லாவிலிருந்து நாம் ஏராளமாக நெல் வாங்குகிறோம். அந்த நெல் பூராவும் சில சமயங்களில் உடனே மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு போவ தற்கு கஷ்டம் ஏற்படக்கூடிய காரணத்தினால் அதைச் சேமித்து வைக்க வேண்டியிருக்கிறது. கடந்த வருஷத்தில் வாங்கின நெல் பூராவும் வருஷம் பூராவும் சேமித்து வைத்து நாம் வெளியே அனுப்பவில்லை. அப்போதைக்கப்போது அனுப்பிக் கொண்டிருந் தோம். இருந்தாலும், சென்ற வருஷம் இந்த கோடவுன்களில் சேமித்து வைக்கப்பட்டது பற்றி குறிப்பிடுகிறேன்.

The total stock stored in the Thanjavur Civil Supplies Godown was 7,013 tonnes of paddy and 4,779 tonnes of rice, and in the Mannargudi Godown 13,674 tonnes of paddy and 14,705 tonnes of rice.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த தான்ய கிடங்குகளுக்குக் கொண்டு வரும் தானியங்களை விரைவில் வாங்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பல ஏஜெண்டுகளை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கூட்டுறவு சொஸைடிகளும் வாங்குகிறார்கள். அதுவும் போதாது என்று சொன்னால் அரசாங்க அதிகாரிகளே நேரிடையாக வாங்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : இப்படி இங்கு பல்வேறு முறைகளிலும் அல்லது பல இனங்கள் மூலமாகவும் வாங்கி ஸ்டாக் செய்யப்பட்ட சரக்குகள் சேதம் இல்லாமல் காப்பாற்றப்பட்டனவா ? அல்லது சேதம் ஏற்பட்டு இருந்தால், அதாவது புழுத்தல், ஊம்புதல், மக்கிப் போதல் இப்படி ஏதாவது சேதம் ஏற்பட்ட அளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடத்தில் இருக்கக்கூடிய விவரப்படி இந்த கோடவுனில் சேமித்து வைக்கப்பட்டது எதுவும் சேதம் அடைந்ததாக இல்லை.

திரு. மு. கருணாநிதி : திருவாரூரில் ஒரு பெரிய அரிசி ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருவாரூர் பகுதியிலே கொள் முதல் செய்யப்பட்ட நெல் உடனடியாக அந்த அரிசி ஆலைக்குக்

[12th March 1966

கொண்டு வரப்படாமல், மன்னார்குடி சேமிப்புக் கிடங்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மறுபடியும் திருவாரூர் ஆலைக்கு வருகிறது. இதனால் ஏற்படுகிற போக்குவரத்து செலவு அதிக மாக ஆகிறது. அதைத் தவிர்க்க முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : இந்த மில்லில் தேவையான நெல்லை ஸ்டாக் வைப்பதற்கு இப்பொழுது அங்கே சேமிப்பு கிடங்குகள் இல்லை. அதையெல்லாம் அமைத்துக் கொண்டிருக் கிறார்கள். அந்த வேலை பூர்த்தியானவுடன் அந்த மில்லுக்குத் தேவையான நெல்லை அங்கேயே சேமித்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

* 266 கேள்வி—**திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தென் மாநிலங்களிடையே உணவுப் பண்டங்கள் போக்குவரத்து பற்றியும், மிகுதியான உணவு தானியங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் புதிய ஏற்பாடுகள் ஏதேனும் செய்யும் உத்தேசமுண்டா?

(இ) அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : இப்பொழுது இருக்கக்கூடிய உணவு மண்டல முறையை மாற்ற வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனைக்குத் தெரிவித்திருக்கிறதா? அப்படியானால் இந்த மாநில அரசாங்கம் ஆலோசித்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்து யாது?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கக்கூடிய கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நமது அரசாங் கத்தை மத்திய அரசாங்கம் ஒன்றும் கேட்கவில்லை.

திரு. செ. மாதவன் : சார், மத்திய, அரசு, சென்னை தனி மண்ட லமாக இருப்பதானால், கோளாவிற்கு அதிகம் அனுப்ப வேண்டும், ஆகவே, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்கிற யோசனையை மாநில சர்க்காருக்குத் தந்ததா?

கனம் திரு. வெ. ராமையா : இன்னும் அதிக நெல் அல்லது அரிசி கொடுப்பதாக நாம் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி முடிவு எடுக்கவில்லை. தனி மண்டலத்தை ஒழித்து விடவேண்டும், மாற்ற வேண்டும் என்கிற பல கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன. கடை சியாக இப்பொழுது இருக்கும் நிலையே நீடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதை மத்திய சர்க்காரும் ஒப்புக் கொண்டி ருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தியா ஒரு முழு நாடு, ஒருமைப்பாடு உடைய நாடு என்கிற கருத்து இருக்கின்ற நிலையில், மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம்